அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவைகளைச் செப்பனிட்டு பழுது பார்த்து, தூர் எடுத்து, கரைகளை எல்லாம் செப்பனிட்டு அங்குள்ள மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையிலே அரசு செயல் பட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டு இருக்கிற ஏரிகளை மட்டுமல்ல, தமிழ் நாட்டில் இருக்கிற எல்லா ஏரிகளையும் நவீனப்படுத்த வேண்டு மென்று ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அது உலக வங்கிக்கு அனுப்பப்பட்டது. 310 கோடி ரூபாயிலே அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் உலக வங்கி அந்தத் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டது. பிறகு, இருந்தாலும் பரவாயில்லை என்று, தாமிரபரணி, பாலாறு, வைகை, பெண்ணையாறு ஆகிய ஆறுகளின் நீர்ப் பிடிப்புப் பகுதியிலுள்ள 5,720 ஏரிகளை யாவது நவீனப்படுத்தலாம் என்று கால்வாய்களை லைனிங் செய்வது உட்பட 400 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் தீட்டப் பட்டது. அவற்றையும் உலக வங்கியில் இருப்பவர்கள் சமீபத் தில் வந்து, ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லிவிட்டு, மீதி இருக்கிற தாமிரபரணி, வைகை, பெண்ணையாறு, பாலாறு பகுதிகளில் இருக்கிற ஒருசில ஏரிகளை அதாவது 850 ஏரிகளை மட்டும் எடுத்துக்கொண்டு 164 கோடி ரூபாயிலே நவீனப்படுத்தலாம் என்று அவர்கள் தெரிவித் தார்கள். பின்னர் அக்குழுவானது அந்த ரூ. 164 கோடித் திட்டத்திற்குக்கூட இறுதி ஒப்புதல் தராமல் முன்னோடித் திட்டமாக சில ஏரிகளை மட்டும் நவீனப்படுத்த இவ்வரசு கருத்துரு அனுப்பினால் உலக வங்கி பரிசீலிக்க ஆயத்தமாக இருப் பதாகத் தெரிவித்துள்ளது. இத்தகைய முன்னோடித் திட்டத்தை நம்முடைய பொறியாளர்களும் சரி, மத்திய அரசும் சரி ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தாமிரபரணி, வைகை, பெண்ணையாறு, பாலாறு பகுதிகளில் இருக்கிற 5720 ஏரிகளையும் செப்பனிட உலக வங்கியால் மறுக்கப்பட்டதால் அடுத்து என்ன செய்வது என்றும், ஈ.ஈ.சி. மூலமாக ஏரிகளை சீரமைக்கும் முதலாம் இரண் டாம் கட்டப் பணிகளை மதிப்பீடு செய்தபின் பிற ஏரிகள் சீரமைப்புக்கு உலக வங்கி மற்றும் ஏனைய நாடுகளின் நிதி உதவி பெறும் கோரிக்கையைத் தொடரலாமா என்பது குறித்தும், யோசித்துக் கொண்டு இருக்கிறோம். எது எப்படி இருந்தாலும் ஏரிகளை நவீனப்படுத்துகிற காரியம் தொடர்ந்து நடைபெறும்.

நாராயணக் காவேரி திட்டம்.

* *3844*—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுக்காவில் நாராயணக்காவேரி திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படும் ?

1990 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) தற்போது இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாராயணக் காவேரி கால்வாய் 1970 ஆம் ஆண்டுவாக்கிலே வெட்டப்பட்டது. இதுவரை அந்தக் கால்வாய் மராமத்து செய்யப்படவில்லை. மண் தூர்ந்து நீர் வரத்தே இல்லாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; அங்கு பல உடைப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவே விவசாயிகளினுடைய அவசியத்தைக் கருதி இந்த ஆண்டு அந்த நாராயணக்காவேரி வேலையை அரசு துவங்குமா என அறிய விரும்புகிறேன்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நாராயணக் காவேரி வாய்க்கால் என்பது குண்டாற்றின் குறுக்கே இருக்கிற அணைக்கட்டின் வலதுபுற மதகிலேயிருந்து புறப்பட்டு கமுதி, முதுகுளத்தூர் பகுதிகளிலே பாய்ந்து, கடைசியாக அது சாயல்குடி ஏரியிலே போய்க் கலக்கிறது. கிட்டத்தட்ட 48.25 கிலோ மீட்டர் தூரத்தைக் கொண்ட இந்த வாய்க்காலில் பலவிடங்களில் Road-Crossing மதகுக் கெட்டுப் போய் இருப்பது, தூர்ந்து இருப்பது இவைகளையெல்லாம் செப்பனிட வேண்டுமென்றால் மிகப் பெரிய தொகை ஒன்று தேவை. இவைகளையெல்லாம் மொத்தமாகச் செப்பனிடுவதற்கு 99 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு திட்டத்தை ஆய்வாளர்கள் தீட்டி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது தலைமைப் பொறியாளர் அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறது. அவருடைய ஒபினியன் கிடைத்த பிறகு அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாராயணக் காவேரிக்காகக் கட்டப்பட்ட அணைக்கட்டு, மதகு, ரெகுலேட்டர் அத்தனையும் 1971 ஆம் ஆண்டு வாக்கிலே கட்டப்பட்டு, இப்பொழுது இடிந்து, சீர்கெட்டுப் போயிருக்கிறது. அதன் காரணமாக, 36 கண்மாய்களுக்குப் பாய்கிற அந்த நாராயணக்காவேரி எந்தப் பலனும் இல்லாமல் வீணாகக் காட்டு வழியே போய்விடுகிறது. ஆகவே, இந்த அவசியமான நிலைமையைக் கருதி, இந்த நடப்பாண்டிலே, 1990—91 ஆம் ஆண்டில் அரசு அதை மராமத்து செய்ய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தினுடைய நியாயத்தை உணர்ந்துதான் அரசு அதைச் செப்பனிடுவதற்காக ஒரு மதிப்பீட்டைத் தயார் செய்து கொண்டிருக்கிறது.

பேரூராட்சி, நகராட்சிகளால் மின்துறைக்குச் செலுத்த வேண்டிய அபராதக் கட்டணத் தொகை.

* *9308*—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பேரூராட்சி, நகராட்சிகளால் மின்துறைக்கு செலுத்த முடியாமல் நிலுவையில் உள்ள காலதாமத அபராதக் கட்டணத் (B. P. S. C.) தொகைகளை, விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்ததைப் போல தள்ளுபடி செய்ய அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

பேரூராட்சி, நகராட்சிகளால் மின் துறைக்குச் செலுத்த முடியாமல் நிலுவையில் உள்ள காலதாமத அபராத கட்டணத் (B.P.S.C.) தொகைகளை தள்ளுபடி செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது இல்லை என்று சொன்னார்கள். குறிப்பாக, நான் ஒரு பஞ்சாயத்துக்காகச் சொல்லவில்லை. எல்லாப் பஞ்சாயத்துக்களுக்காகவும் சொல் கிறேன். குறிப்பாக வேதாரண்யம் பேரூராட்சியில் 80,000 ரூபாய் கட்டுவதற்கு 1,90,000 ரூபாய் அபராத வட்டி என்று போட் டிருக்கிறார்கள். இப்படியென்று சொன்னால், நகராட்சிகள் எந்த முறையிலே, பேரூராட்சிகள் எந்த வகையிலே பணம் கட்ட முடியும் ? இந்தப் பெயரைச் சொல்லி, இப்பொழுது பேரூ ராட்சியிலிருந்து தீர்மானங்கள்—தெரு விளக்குகளுக்குத் தீர்மா னம் கொடுத்தால் நம்முடைய இலாக்கா அதற்கு அனுமதி வழங்குவது இல்லை. தெரு விளக்குப் போடுவது இல்லை. ஆகவே, இப்பொழுது புதிதாகத் தெரு விளக்குகள் போட முடியாத நிலை இருக்கிறது. நிலுவையிலுள்ள அபராத வட்டி யைக் கட்ட முடியாத நிலையும் இருக்கிறது. ஆகையினால், தயவு செய்து அமைச்சரவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.